# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : 044-25358718, 9444058718, 9677048718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:105:2022 17.03.2022

அன்பார்ந்த தோழர்களே !

## அரசின் தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கு எதிராக அகில இந்திய வேலைநிறுத்தம் - 28-29, மார்ச் 2022

மத்திய தொழிற்சங்கங்களும், துறை வாரியான சங்கங்களும் இணைந்து வரும் மார்ச் 28, 29 ஆகிய இரண்டு நாட்கள் அகில இந்திய வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. வங்கித்துறையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் (AIBEA), அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கம் (AIBOA), இந்திய வங்கி ஊழியர் கூட்டமைப்பு (BEFI) ஆகிய சங்கங்கள் வேலைநிறுத்ததிற்கு அழைப்பு விடுத்துள்ளன. அகில இந்திய அளவில் 20 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

2014ஆம் ஆண்டிற்குப்பின் அரசின் கொள்கைகள் கார்பொரேட்டுகளுக்கு ஆதரவாகவும், சாதரண மக்களுக்கு எதிராகவும் மாற்றப்பட்டுள்ளதன் விளைவாக மேல்தட்டில் உள்ள ஒரு சதவீத பணக்காரர்கள் மொத்த தேசிய வருமானத்தில் 70 சதவீதத்தை பெற்றுவருகின்றனர். பெருந்தொற்றுக் காலகட்டத்தில் பணக்காரர்களின் எண்ணிக்கையும் அவர்கள் சொத்தின் மதிப்பும் அதிகரித்துள்ள அதே வேளையில், சாதாரண மக்கள் வேலை இழப்பையும், கட்டுக்கடங்காத விலைவாசி உயர்வையும் சந்தித்து வருகின்றனர். பலர் இன்று வருமைக்கோட்டிற்கு கீழே தள்ளப்பட்டுள்ளனர். நாட்டிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை களைவதற்கு பதிலாக அரசு ஏற்றத்தாழ்வுகளை அதிகரித்துவருகிறது.

இந்தப் போராட்டம் நமது நலன்களை காப்பதற்கு மட்டுமல்ல, ஜனநாயகத்தை மீட்பதற்குமான போராட்டம். மதரீதியாக மக்கள் பிளவுபடுத்தப்பட்டு வருகின்றனர். ஒரு பகுதிக்கு எதிராக மற்றொறு பகுதி நிறுத்தப்பட்டு வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவருகிறது. மக்கள் அடிப்படை தேவைகளை கூட பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளனர். உலக அளவில் அதிகமான மக்கள் பட்டினியாக இருக்கும் நாடாக இந்தியா மாறிவருகிறது.

மக்களுக்கான அடிப்படை சுகாதார வசதி கூட வழங்கப்படாமல், பெருந்தொற்று காலகட்டத்தில் இறந்த ஆயிரக்கணக்கான உடல்கள் கங்கையில் வீசப்பட்ட சம்பவம் நமது மனசாட்சியை உலுக்குவதாகவுள்ளது.

உலக அளவில் கச்சா எண்ணை விலை குறைந்த காலகட்டத்திலும், அரசு வரியை உயர்த்தி விலைவாசி உயர்வுக்கு வழிவகுத்தது. சாதாரண மக்களின் சேமிப்பு, முதலீடுகளுக்கு குறைந்த வட்டி வழங்கப்படுகிறது. சாதாரண மக்களுக்கான மறைமுக வரி உயர்த்தப்படும் வேளையில், கார்பொரேட்டுகளுக்கு சலுகைகள் வழங்கப்படுகிறது.

கடந்த 70 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும் அடிமாட்டு விலைக்கு விற்கப்படுகிறது. தற்பொழுது, இந்திய காப்பீட்டுக்கழகம் (LIC) விற்கப்படுகிறது. அரசின் சொத்துக்களை விற்பது, குத்தகைக்கு விடுவதன் மூலம் 6000 கோடி திரட்ட அரசு திட்டமிட்டு செயல்படுத்திவருகிறது.

பொதுத்துறை வங்கிகள் தனியார்மயமாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தியன் ஏர்லயன்ஸ் விற்கப்பட்டுவிட்டது. அரசு தொழிலாளர் நலனுக்கு எதிராக சட்டங்களைத் திருத்தி, அதிக சுரண்டலுக்கு வழிவகுக்கிறது. அனைத்து நிரந்தர தொழிலாளர்களையும் தற்காலிக ஊழியர்களாக்கும் முயற்சியும் நடைபெற்று வருகிறது.

இந்தச் சூழலில், இந்தியாவிலுள்ள அனைத்து தொழிலாளர்களும் ஒன்றிணைந்து போராடுவது மட்டுமே ஒரே வழி என்ற நிலையில் மத்திய தொழிற்சங்கங்கள் இணைந்து வரும் மார்ச் 28-29 இரண்டு நாட்கள் வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

<u>நமது கோரிக்கைகள்:</u>

- **பொதுத்துறை பாதுகாக்கப்பட வேண்டும்.**
- **வங்கிகள் தனியார்மயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும்.**
- **வாராக்கடன்கள் தள்ளுபடி செய்யப்படாமல், வசூலிக்கப்பட வேண்டும்.**
- **மக்களின் சேமிப்புக்கு அதிக வட்டி வழங்கப்பட வேண்டும்.**
- **பொதுமக்களுக்கான சேவை கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும்.**
- **புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு (NPS) பதிலாக, பழைய ஓய்வூதியம் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்.**
- **வங்கிப்பணிகள் அயலாருக்கு வழங்கப்படக் கூடாது.**
- **வங்கிகளில் பணியாற்றும் வணிக முகவர்கள், தற்காலிக பணியாளர்கள், நகை மதிப்பீட்டாளர்கள், வங்கி நிதி வசூலிப்போர் ஆகியோர் வங்கியின் நிரந்தர ஊழியர்களாக்கப்பட வேண்டும்.**

வழக்கம்போல, யூனியன் வங்கியிலுள்ள நமது தோழர்கள் அனைவரும், உணர்வுப்பூர்வமாக வேலைநிறுத்த தயாரிப்பு நிகழ்வுகளிலும், 28, 29 மார்ச், 2022 இரண்டு நாட்கள் வேலைநிறுத்தத்திலும் முழுமையாகக் கலந்துகொண்டு, இந்த வேலைநிறுத்தத்தை வெற்றிபெறச் செய்திட வேண்டுகிறோம்.

தோழமை வாழ்த்துகளுடன்,

அ.சிதம்பரம்

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**

**Make 28-29th March, 2022 National Strike a Grand Success**